# மனைவிக்கு ஒரு காதல் கவிதை

நீ என் பிராணவாயு
நான் உனது கரியமில வாயு.
தந்தையும் தாயுமற்ற இந்த பிரபஞ்சத்துக்குள்
இரு அநாதைக் குழந்தைகளான நீயும் நானும்.
நான் மனிதன்.
நீ தாவரம் .
என் சுவாசத்தில் கிடைத்த கரியமிலவாயுவை வைத்து
ஒளிச்சேர்க்கையில் உணவு தயாரிக்கிறாய் நீ.
எனது எல்லாக் காதலிகளையும்
குளியலறைக் கண்ணாடியைப் போல
பிரதிபலித்துக் கொண்டு
நீ என்னைக் கட்டி அணைக்கிறாய்.
நீருக்கடியில் குளத்தில் இறங்கும் படிகளில்
ஒவ்வொன்றாகக் கால் வைத்துத் தடவி இறங்குவதுபோல்
ஆண்டுதோறும் நீ எனக்குள் இறங்கியபோது
நாம் பகிர்ந்து கொள்ளாதவை
புனிதமான நமது அந்தரங்கங்கள் மட்டுமே.
ஏதென்று தெரியாத
ஏதோவொரு மெலிதான காற்றில்
தரையோடு தேய்ந்தபடி சருகுகளைப் போல்
நகர்ந்து வந்திருக்கிறோம் நாம்.
நாளைக்குச் செத்துப் போகப்போகிற ஒரு மொழியை
எழுத்துக் கூட்டி வாசிக்கிற கடைசி வாசகி நீதான்.
அபத்தமான இந்த முட்டாள் பிரபஞ்சத்தில்
குழந்தையாக தூக்கத்தில் புன்னகைத்தபோது

கண்ட தூய்மையான கனவு போன்ற
அர்த்த உற்பத்திகளைத் தொடர்ந்து செய்வோம்
வா என் அன்பே.

17 – ஆக்ஸ்ட் 2020

